# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

தொகுதி - 3

FATIMA COLLEGE
LEAD KINDLY LIGHT
MADURAI



தமிழ் உயராய்வு மையம்

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

மதுரை - 18

Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| | | **உரைநடை** | |
| 18. | முனைவர் இராஜாத்தி, ஆ. | லெவே சாமியின் வாழ்வியல் மனிதநேயம் | 65 |
| 19. | திருமதி சாந்தி, இரா. | ரேனியஸ் ஐயரின் மனித மாண்புகள் | 68 |
| 20. | கவிஞர் தஸ்லிம் காஜா | கிறித்தவ இலக்கியங்களும் தொன்மைத் தமிழும் | 72 |
| 21. | முனைவர் பாத்திமா, ஜே. | வங்கத்தின் தங்க மனிதர் வில்லியம் கேரி மொழிப்பணியும் சமூகப்பணியும் | 76 |
| 22. | திருமதி லியோ டென்சிலி, லி. | மூதறிஞர் கு. இன்னாசி கட்டுரைகளில் மனித மதிப்பீடுகள் | 79 |
| | | **சிறுகதை** | |
| 23. | திருமதி காயத்ரி, ர. | ‘சிலுவை’ சிறுகதையில் துறவியல் மதிப்புகளும் நன்மதிப்புப் போராட்டமும் | 82 |
| 24. | திருமதி பாண்டியம்மாள், ரா. | ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ சிறுகதைத் தொகுப்பில் அன்பு | 85 |
| | | **நாவல்** | |
| 25. | திரு. செல்வக்குமார் | கிளாரிந்தா நாவலில் கிறித்தவ வாழ்வியல் மதிப்பீடு | 88 |
| 26. | ஹெலன், ஜோ. | அருட்பணி மாற்கு சே.ச வின் சுவர்கள் காட்டும் கிறிஸ்தவ மதிப்பீடு. | 91 |
| | | **நாடகம்** | |
| 27. | முனைவர் பொன்னி, இரா. | ஞானத்தச்சன் நாடகத்தில் வாழ்வியல் அறநெறிகள் | 95 |
| 28. | திருமதி மரகதம், ச.கா. | தாமஸ் மலைக் குறவஞ்சி நாடகம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 98 |
| | | **கவிதை** | |
| 29. | ஆனந்தி, தி. | இயேசுகாவியம் கூறும் மனிதமாண்பு | 102 |
| 30. | முனைவர் எஸ்தர் அருள்மேரி, சா.ஞா. | வேதநாயக சாஸ்திரியாரின் கவிதைகளில் திருவிவிலியக் கோட்பாடுகள் | 105 |
| 31. | திருமதி கார்த்திகா, மு. | மனிதநேயமும் இயேசு மாகாவியமும் | 111 |
| 32. | முனைவர் குமரகுருபரன், க. | இயேசு காவியத்தில் தனிமனித மதிப்பீடுகள் | 114 |
| 33. | குளோரி, த. | இயேசுகாவியத்தில் மனிதப் பண்பு | 118 |
| 34. | திருமதி சகாய பவுலின், ஜோ. | கன்னிமரி காவியத்தில் அன்பு | 122 |


Scanned by CamScanner

# ஞானத்தச்சன் நாடகத்தில் வாழ்வியல் அறநெறிகள்

முனைவர் இரா. பொன்னி
உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை

பதினேழாம் நூற்றாண்டில் தோன்றிய சிற்றிலக்கிய நாடகவகைகளுள் கீர்த்தனை நாடகமும் ஒன்றாகும். கீர்த்தனை என்பது புகழ்ந்து பாடும் பாடலாகும். இசையோடு கூடி இயற்றப்பெற்றது கீர்த்தனை நாடகம். இது கதைகூறல் உத்திமுறையில் அமையப்பெறுவது. இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, பராங்குச நாடகம் போன்றவை குறிப்பிடத்தக்க கீர்த்தனை நாடக வடிவங்களாகும். இறைவன் புகழ்பாடக்கூடிய நாடகமாக ஆக்கப்பெற்ற இந்நாடக வடிவம் பின் சமூக அவலங்களையும் பாடத் தொடங்கியது.

இசைவடிவங்களைக் கொண்டு இயற்றப்பெறும் கீர்த்தனை இலக்கியம் 'சிந்து' என்ற பாடல் வகையில் கீர்த்தனைகளாக வளர்ச்சி பெற்றது என்பர். கதை கூறல் முறையிலும், பாடிச் செல்லும் நிலையிலும் சிறப்புப் பெற்ற கீர்த்தனை நாடகக்கூறு மிக்கதாக விளங்குமாம். நாடகக் கீர்த்தனைக்கு முன்னோடியாக விளங்குவன காலத்தால் முந்திய இராம நாடகக் கீர்த்தனை மற்றும் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை இவ்விரண்டு நாடகங்களாகும். வேத நாயக சாஸ்திரியார் இயற்றிய ஞானத்தச்சன் நாடக நூல் உணர்த்தும் வாழ்வியல் நெறிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

'அண்ணாவியார்', 'தமிழ் வாத்தியார்', 'உபதேசியார்', 'சுவிசேடக் கவிராயர்', 'வேத சாஸ்திரி', 'வேத சிரோமணி', 'மகாஞானக் கவிச்சக்கரவர்த்தி', 'ஞானதீபக் கவிராயர்' என்றெல்லாம் அழைக்கப்படுபவர் வேத நாயக சாஸ்திரியார். இவர் தமது படைப்புகள் மூலம் கிறித்தவத்திற்கும், தமிழுக்கும் நிரம்பத் தொண்டாற்றியுள்ளார். இறைவனை உலகின் படைப்பாளியாக ஓர் ஆக்குநராகப் படைத்திருக்கிறார். இயல், இசை, நாடகம் எனும் மூன்றிலும் இலக்கியங்கள் படைத்துள்ள இவர் நாடக நூல் மூலமே தம் கூறக்கூடியக் கருத்துக்கள் மக்களை நேரடியாகச் சென்றடையும் என்பதை நிருபித்துள்ளார்.

ஞானத்தச்சன் நாடகம் 1830இல் இயற்றப்பெற்றதாகக் கூறுவர். இந்நூல் தஞ்சை வேத நாயக சாஸ்திரியாரால் இயற்றப்பட்டது. இராம நாடகக் கீர்த்தனை போன்றே படைக்கப்பட்டிருப்பினும் தனக்கெனத் தனி முத்திரைதனைப் பதித்துள்ளது ஞானத்தச்சன் நாடகம். ஞானம் என்பது அறிவில் தெளிவு, அறிவையறிந்த தெளிவு ஆகும். இத்தகு தெளிவை உண்டாக்கி இறைவனை உணர வைக்கிறார். இறைவனைத் தொழும் போதெல்லாம் உலகத்தார்க்கு அறிவுறுத்துவதுபோல் உரைக்கும் பாங்குதனை இந்நூலில் கையாண்டுள்ளார். இங்கு தச்சனாக உருவகம் செய்யப்படுவர் இறைவனாவார். இதனை 'தச்சன் படைத்ததல்லவோ உலகமெல்லாந் தச்சன் படைத்ததல்லவோ' எனும் வரிகள் புலப்படுத்தும். மேலும் அறம் சார்ந்த கருத்துக்களையும் வெளிப்படுத்திச் செல்கிறார். இந்நூலில் உலகப்படைப்பு, உடல் அமைப்பு, சாதி எதிர்ப்பு, சமத்துவப் பாகுபாடு போன்ற கருத்துக்களை அழகாகப் பதிவு செய்துள்ளார்.

இந்நூலில் நாட்டில் பல்வேறு சாதிப் பிரிவுகள் இருந்து வந்துள்ளமையைக் காட்டிச் செல்கிறார். மனிதர்கள் அனைவரும் ஒரே குலத்தில் இருந்து பிறந்தவர்கள் ஒரு தாய் தந்தையரின் வழித்தோன்றல்கள் என்கிறது புனித நூலான குர்-ஆன்.

"ஏழை என்றும் அடிமை என்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநிகர்ச
மானமாக வாழ்வமே"